முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1658

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**13.04.2024**, சனிக்கிழமை

1. உலகோரை ஞானவழி வழிநடத்தி
உண்மை நிறைந்த ஞானவான்கள் படை
உருவாக உலகமெலாம் ஞானசபை நிறுவி இந்த கலியில்
உண்மை ஞானம் அருளுகின்ற குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்பிரமணியர் யானும்
அருளுவேன் ஞானஅறிவுரை ஆசி
வரமென சோபகிருது சேல்திங்கள்
(சோபகிருது வருடம் பங்குனி மாதம் 31 ம் நாள், 13.04.2024, சனிக்கிழமை)
வல்லமை கூடிட அரங்கனுக்கு யானும் உரைப்பேன்
3. உரைக்கவே அரங்கனுக்கு சக்தியூட்டி
உண்மைபட சுப்பிரமணியர் யானும்
குறைவின்றி காத்து வருதல் காண
குருஅரங்கன் உண்ணும் உணவு
4. அனைத்தும் தவஉணவாக மாற்றி நிறைவாக சக்தி அருளி வருகின்றேன்
நிலமதனில் அரங்கனுக்கு கரம் கால் தேகம் முழுக்க
சுப்பிரமணியர் யானும் நிலைத்தன்மைக்குண்டான
பேராற்றல் வழங்கி பரிபூரணமாய் காத்து வருகின்றேன்
5. அரங்கனுக்கு நிகழும் அஜீரணம் பிறவகை
அனைத்து சிக்கலையும் போக்கி காப்பு தருவேன்
வரமென சூட்சும சக்தி ஊட்டி
அரங்கனுக்கு வாசியையும் வழிநடத்தி
6. ஆறுமுகன் யான் உள்ளிருந்து இயக்க
அரங்கன் வழிவருகின்ற சொல் செயல்
அத்தனையும் வேதமாகி அகிலத்தை பாதுகாக்க கூடும்
வரமென அரங்கனிடம் கரம்பட தீட்சை பெற்ற மக்களுக்கு எல்லாம்

7. வாசிவசம் சித்தியாகி இந்த கலியில்
வருங்காலம் அவர்களும் அரங்கன் தேடலில் ஞானிகளாகி
ஆக்கமுடன் உலக மாற்றத்தில் பெரும் பங்கு கொண்டு
அகிலத்தையே மாற்றும் மகாசக்திகளாக
8. மகாசக்திகளாக உருவெடுக்க நேரும்
ஆற்றல்பட இந்த மாற்றத்தை
ஆறுமுகன்யான் அரங்கனை கொண்டு நடத்துவேன்
ஞானஅறிவுரை ஆசி முற்றே

–சுபம்–